செ.வெ.எண்: 588 நாள்: 09.09.2019

**கும்பகோணம் அரசுப் போக்குவரத்து கழகத்தின் வழக்குகளுக்கு 14.09.2019 அன்று தேசிய லோக் அதாலத் நடைபெறவுள்ளது.**

**தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழக மேலாண் இயக்குனர் (கும்பகோணம்) திரு.ஆர்.பொன்முடி அவர்கள் தகவல்.**

---

கும்பகோணம் அரசுப் போக்குவரத்து கழகத்தின் வழக்குகளுக்கு 14.09.2019 அன்று தேசிய லோக் அதாலத் நடைபெறவுள்ளது. இதுகுறித்து தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழக மேலாண் இயக்குனர் (கும்பகோணம்) திரு.ஆர்.பொன்முடி அவர்கள் தெரிவித்ததாவது.

14.09.2019 இரண்டாவது சனிக்கிழமை அன்று காலை 10.00 மணிக்கு மாநில சட்டப்பணிகள் குழு சார்பில் சென்னை உயர்நீதிமன்ற, மதுரை கிளை மற்றும் அனைத்து கீழமை நீதிமன்றங்களிலும், நிலுவையிலுள்ள வழக்குகளுக்கு சமரச தீர்வு காண தேசிய லோக் அதாலத் நடைபெறவுள்ளதாகவும், இதில் தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (கும்பக்கோணம்) தொடர்பான மோட்டார் வாகன விபத்து வழக்குகளுக்கு சமரச தீர்வு கண்டு சம்பந்தப்பட்டவர்கள் பயனடையலாம்.

இது தொடர்பாக கும்பகோணம் மண்டலம் 0435-2403724-26, 90432 38312, 86675 90214, திருச்சி மண்டலம் 0431-2415551-54, 94878 98057, 98945 91570, காரைக்குடி மண்டலம் 04565-234125-26, 94878 98095, 94878 98103, புதுக்கோட்டை மண்டலம் 04322-266111, 94878 98065, 88706 11267 என்ற தொலைபேசி, கைபேசி எண்களில் தொடர்பு கொள்ளலாம். இவ்வாறு தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழக மேலாண் இயக்குனர் (கும்பகோணம்)திரு.ஆர்.பொன்முடி அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

**செய்தி வெளியீடு - செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், புதுக்கோட்டை.**